உ

ஸ்ரீராமஜெயம்

இராமோதந்தம்.

ஸம்ஸ்கிருதத்திலிருந்து

மொழி பெயர்க்கப்பட்டது.

அம்பாவிலாச புத்தகசாலை

திருவல்லிக்கேணி,

சென்னை.

1912

 [Price As 2.

உ

இராமோதந்தம்.

இராமர் துதி.

நாடிய பொருள்கை கூடும் ஞானமும் புகழுமுண்டாம்
வீடியல் வழியதாக்கும் வேரியங் கமலை நோக்கும்
நீடிய வரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலையி ராமன் தோள்வலி கூறுவோர்க்கே.

அனுமார் துதி.

அஞ்சிலே யொன்று பெற்று னஞ்சிலே யொன்றைத்தாவி
அஞ்சிலே யொன்று றாக வாரியர்க் காக வேகி
அஞ்சிலே யொன்றுபெற்ற வணங்கைக்கண் டயலா ரூரில்
அஞ்சிலே யொன்றை வைத்தான் அவனெம்மை யளித்துக்காப்
[பான்.

கலைமகள் துதி.

புத்தகம் படிக மாலை குண்டிகை பொருள்சேர் ஞான
வித்தகந் தரித்தசெங்கை விமலையை யமலை தன்னை
மொய்த்த கொந் தளகபார முகிண்முலைத் தவளமேனி
மைத்தகு கருங்கட் செவ்வா யணங்கினை வணங்கல் செய்வாம்.

சப்தம் அர்த்தம் இவ்விரண்டும் ஒன்று சேர்ந்திருப்பதுபோல் எப்போதும் ஒன்று சேர்ந்திருப்பவர்களும் உலகத்திற்குத் தாய் தந்தையருமாகிய பார்வதி பரமேசு

வரர்களை, சப்தம் அர்த்தம் இவ்விரண்டையும் அடைவதன் பொருட்டு நான் வணங்குகிறேன்.

ஸ்ரீவத்ஸ மென்னும் அடையாளத்தை மார்பில் உடையவராகிய ஸ்ரீபதி மகாவிஷ்ணுவை வணங்கி ஸ்ரீவான்மீகிமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய ஸ்ரீராமோதந்தம் (இராமசரிதசரித்திரம்) என்னும் கிரந்தத்தைக் கூறுகிறேன்.

முன் விச்ரவஸ் என்னும் பெயருடைய பிரமரிஷி ஒருவரிருந்தார். அவருக்கு இராவணன் என்னும் ஓர் இராக்கதன் பிறந்தான். அவன் எங்கும் பிரசித்தியுள்ளவனாக விருந்தான். அவனுக்குக் கும்பகர்ணன் விபீஷணன் என்னும் இரண்டு சகோதரர்களிருந்தார்கள். இவர்களிருவரும் பிரமதேவரைக் குறித்துக் கடுந்தவம் புரிந்து அநேகவரங்களைப் பெற்றுக் கொண்டார்கள். மூத்தவனாகிய இராவணன் மானிடர்களைத் தவிரமற்றெவராலும் தனக்கு மரணம் நேரிடாதிருக்க வேண்டுமென வரம் பெற்றனன். கும்பகர்ணனுடைய விருப்பம் தேவர்களை யொழித்துவிட வேண்டுமென்றிருந்ததலால் தனக்கு இடைவிடாத நித்திரை உண்டாகவேண்டுமெனக் கேட்டுக் கொண்டனன்.

சத்வகுணங்களுடன் கூடிய விபீஷணனோ வெனில் அகிலலோக சரண்யனாகிய மகாவிஷ்ணுவிடம் பக்தியுண்டாகவேண்டுமெனக் கேட்டுக்கொண்டான். பிரமதேவர்

மூவருக்கும் அவரவர் கேட்டுக்கொண்டபடி வரங்களை யளித்து அங்கேயே மறைந்தார்.

இங்ஙனம் பெரியவரம்பெற்ற இராவணன் பின்பு இலங்கையை ஆண்டுவந்த குபேரனிடம் அமர்புரியச் சென்று அவனை வென்று இலங்கையும் புஷ்பக விமானத்தையும் கைப்பற்றிக்கொண்டு அங்கேதானிருந்து அரசுபுரிந்து வந்தான். பின்பு அந்தத் தசமுகனானவன் மயனுடைய மகளாகிய மந்தோதரியை மணந்து அவளிடம் மேகநாதன் என்னுமோர் மைந்தனைப் பெற்றான். பின்னர் அந்த தசக்ரீவன் இந்தப் புவியுமன்றிப் பாதாளத்தையும் தன்வசமாக்கிக்கொண்டு அங்கங்கு தான் கண்ட இலக்ஷணமான மாதர்களையும் அபகரித்தான். வேதம்பேசும் கருமங்களை அவமதித்து அந்தணர்களைத் துன்பப்படுத்தி வந்தான். அன்றியும் தன்னுடைய கிங்கரர்களை யனுப்பி இந்திரனது கற்பகத்தரு, மற்றுமுள்ள சிறந்த பொருள்கள் இவைகளை வரவழைத்து இலங்கையிலேற்படுத்திக்கொண்டு வெகுகாலம் வாசஞ்செய்து வந்தான்.

இங்ஙனம் இவன் இருந்துவருகையில் தேவர்கள் பிரமதேவனிடம் வந்து இராவணன் செய்யும் துஷ்டச் செய்கைகளைக் கூறி முறையிட்டார்கள். பிரமதேவர் உடனே அந்தத் தேவர்களுடன் பாற்கடலை யடைந்து ஹிருஷீகேசனை வணங்கித் தோத்திரம் செய்தார். பின் அசுரர்களுக்குப் பகைவராகியபரந்தாமன் பிரஸன்ன

மாகிப் பிரமனைநோக்கி, "வந்த வரலாறென்ன" வென்று கேட்டார். கமலாசனன், தசமுகராவணனாகிய அரக்கன் செய்யும் உபத்திரவங்களை யெடுத்துக் கூறினர். அது கேட்ட பக்தவத்ஸலனாகிய நாராயணன் முறுவல்செய்து "பிரமதேவனே! இனி நீங்கள் அஞ்சவேண்டாம். நான் புவியில் தசரதமகாராஜனுக்குப் புத்திரனாகப் பிறந்து இராவணனை வதம் செய்கிறேன். அப்படி அவனை நான் வதைப்பதற்காகத் தேவர்கள் யாவரும் குரங்குகளாகப் பிறந்து எனக்குதவி செய்யவேண்டும்" என்றார்.

இங்ஙனம் பிரபுவாகிய முகுந்தன் பிரமனிடம் கூறியதும் அந்தர்த்தான மடைந்தார். பிரம தேவரும் தமக்குத் தாமோதரன் அளித்த வாக்குறுதியை நம்பி மனமகிழ்ச்சியடைந்து தேவர்களுடன் தம்மிருப்பிடம் சென்றார். பிறகு இந்திரன் மகாபலசாலியாகிய வாலியென்னும் வானரவீரனை யுண்டுபண்ணினான். சூரியன் சுக்ரீவனையும் வாயு ஆஞ்சநேயனையும் உண்டுபண்ணினார்கள். இந்த வானரர்களுக்குள் வாலியே சிறந்தவனானான். அவன் கிஷ்கிந்தாபுரியில் தன் இராஜ்யத்தை யேற்படுத்திக் கொண்டு அங்கு வாசஞ்செய்து வந்தான்.

அக்காலத்தில் சூரியவம்சத்தில் தசரதன் என்னும் ஓர் அரசன் அயோத்தியா புரியிலிருந்து அரசு புரிந்து வந்தான். இவனுக்கு மனைவிகள் மூவரிருந்தும் மக்கட்பேறுண்டாகவில்லை; அவ்வரசன் தன் மந்திரி சுமந்திரன்

என்பவனுடைய சொற்படி ருசியசிருங்க முனிவரை வரவழைத்துப் புரோகிதராகிய வசிஷ்ட முனிவருடன் புத்திரகாமேஷ்டி யாகத்தைச் செய்தான். அந்த யாகாக்கினியினின்று ஓர் புருஷன் பாயஸத்துடன் தோன்றி அந்தப் பாயஸ பாத்திரத்தைத் தசரதரிடமளித்து இதை உமது மனைவிகளுக்குக் கொடுங்களென்று கூறி மறைந்தான்.

அந்தப் பாயஸத்தைத் தசரத சக்ரவர்த்தி அன்புடனும்மனமகிழ்ச்சியுடனும்பெற்றுக்கொண்டுஅதைத்தமது மனைவிகளுக்குக்கொடுத்தார். அவர்கள் அதை அருந்திய பின் கர்ப்பந்தரித்தார்கள். அவர்களுள் கௌஸல்லியா தேவி காலக்கிரமத்தில் சாதுக்களாகிய தாமரை மலருக்குச்சூரியனாகிய இராமச்சந்திரமூர்த்தியை ஈன்றாள். பின் அவ்விதமே கைகேயியும் பரதாழ்வானைப்பெற்றாள். பின்னர் சுமித்திரை இலக்ஷ்மண சத்ருக்னர்களைப்பெற்றாள். இதைக்கண்ட தசரத சக்ரவர்த்தி மிகவும் மனமகிழ்ந்து குமாரர்களுக்கு ஜாதகருமம் முதலியவைகளைச் செய்வித்து பிராமணர்களுக்கு அநேக தான தருமங்களை வழங்கினர். பின்னர் அந்த நான்கு குமாரர்களும் ஒருவர்க்கொருவர் இணைபிரியா நேசமுடையவர்களாயிருந்து குருவையடுத்துச் சகலகலைகளையும் கற்றுணர்ந்து மிக்சாமர்த்திய சாலிகளாக விளங்கினர்கள்.

இப்படி யிருந்துவருகையில் விசுவாமித்திர முனிவர் தசரத சக்ரவர்த்தியிடம் வந்து தாம்செய்யும் யாகத்தைக்

காப்பதன்பொருட்டுச் சுப்பிரமணியக் கடவுளுக்குச் சமமான இராமச்சந்திர மூர்த்தியைத் தம்முடன் அனுப்பும்படி கேட்டார். தசரதன் முதலில் மனக்கிலேசமடைந்தாராயினும் வசிஷ்டமகாமுனிவர் சொல்லத் தைரியமடைந்து இலக்குமணனுடன் இராமனையும் அந்தக் கௌசிகன் பால் விடுத்தனர். விசுவாமித்திரர் அவ்விரு வாலிபர்களையும் அழைத்துக்கொண்டு அயோத்தியிலிருந்து செல்லும்போது, பலை, அதிபலை என்னும் திவ்யாஸ்திரங்களை இராம லக்ஷ்மணர்களாகிய வாலிபர்களுக் குபதேசம் செய்தார். பின் இராமபிரான் விசுவாமித்திருடைய உத்தரவின்படி உலகத்தை உபத்திரவித்துவந்த கொடிய தாடகியைச் சங்கரித்தார். தாடகையின் வதமுடிந்ததும் விவாமித்திர முனிவர் இராமலக்ஷ்மணர்களுடன் ஸித்தாசிரமம் சென்று யாகம் செய்யத் தொடங்கினர். அப்பொழுது அநேக அரக்கர்கள் அங்கே வந்து அவருடைய யாகத்திற்நப் பலவிதமாக இடையூறிழைத்தனர். அப்படிப்பட்ட இராக்கதர்களில் முக்கியமானவர்களாகிய மாரீசனை இராமபிரான் சமுத்திரத்தில் தள்ளி, சுபாகு முதலியவர்களைக் கொன்று முனிவரது யாகத்தைக் காப்பாற்றினர்.

இதன் பிறகு இராமலக்ஷ்மணர் இவ்விருவருடன் விசுவாமித்திரமுனிவர் மிதிலைக்குச்சென்றார் போகும்வழியில் இராமபிரான் அகலியையின் சாபவிமோசனம் செய்தார். மிதிலையில் ஜனகமகாராஜனால் உபசரிக்கப்பட்டார்

இராமபிரான். பின், சீதாதேவியின் சுயம்வரத்தில் வீர பரீக்ஷையின் நிமித்தம் ஏற்படுத்தியிருந்த சிவதனுசைக் கௌசிகருடைய உத்தரவுப்படிமுறித்தார். பிறகு ஜனகமகா ராஜன் தசரதருக்குத் தூதன் மூலமாகத் திருமுகமனுப்பி வரவழைத்து அவ்விறைவன் குமாரர்களாகிய இராம பிரான், இலக்குமணன், பரதன், சத்ருக்கனர்களுக்கு, சீதை, ஊர்மிளை, மாண்டவி, சுருதகீர்த்தி முதலியவர்களை முறையே கொடுத்து விவாகம் முடித்தனன். ஜனகமகா ராஜனிடம் வெகுமதிபெற்றவுடன் இராமபிரான் தமது தம்பிமார்கள், தந்தைமுதலியவர்களோடு அயோத்திக்குப் புறப்பட்டு வந்தார். வரும் வழியில் தம்மை யெதிர்த்த பிருகுவம்சத்திற் பிறந்த பரசுராமரை வென்று அயோத் தியை யடைந்து பிரஜைகளுக்குப் பரமானந்த முண்டா கும்படி சீதாதேவியுடன் சுகமாக வாழ்ந்து வந்தார்.

இங்ஙனம் இருந்து வரும்போது ஒருநாள் பரத சத்ருக்னர்கள் இருவரும் தங்கள் மாமனுடைய ராஜ்யமாகிய கேகயதேசம் சென்றார்கள். இச்சமயத்தில் தசரத சக்ரவர்த்தி தமது அமைச்சர்களுடைய ஆலோசனைப்படி இராமபிரானுக்கு இராஜ்யாபிஷேகம் செய்ய நிச்சயித்துச் சகல பிரயத்தினமும் செய்து முடித்தார். இதனைக்கண்ட கைகேயி மனமகிழ்ச்சியுட னிருந்தனளேனும் கூனியின் தூண்டுதலால் புத்திபேதமடைந்து இராமபிரானுக்குச் செய்யவிருந்த இராஜ்யாபிஷேகத்தைத் தடுக்கக் கருதித் தனது நாயகன் தசரதரிடம் தான் ஏற்கனவேபெற்றிருந்த இரண்டு வரங்களை நிறைவேற்றவேண்டுமெனப் பிடிவாதஞ்செய்து அவற்றில் ஒன்றினால் இராமபிரான் காடேகவும்மற்றொன்றால் பரதனுக்கு இராஜ்யாபிஷேகம் செய்விக்கவும் கேட்டனள். சக்ரவர்த்தி மிகுந்த மனவருத்தத்துடன் வரங்களை நிறைவேற்றினர். உடனே கைகேயி இராமபிரானைக் காட்டுக்குச் செல்லும்படி ஆக்ஞாபித்தனள். தாயின் ஆக்ஞைப்படி இராமபிரான் வனத்திற்கேகப் புறப்பட்டுப் பிதா, குரு முதலிய எல்லோரிடமும் விடைபெற்றுச் சென்றனர். அதைக்கண்டதும் மிகவும் வருத்தமுற்ற சீதையும் இலக்குமணனும் அவர் கூடவே வனத்திற்குச் செல்லப் புறப்பட்டனர். நகரத்து ஜனங்களும் ஸ்ரீராமபிரானை யனுசரித்தனர். இப்படி ஊர்முழுதும் தம்மையனுசரித்து வருவதை யறிந்த இராமச்சந்திரமூர்த்தியானவர் அவர்களை விட்டுப் பிரியக் கருதி இரவில் அவர்களறியாமல்

பிரிந்து சுமந்திரன் இரதமோட்டச் சென்று கங்கைக் கரையிலுள்ள சிருங்கபேரபுரம் அடைந்தார். அங்கே குகனுல் உபசரிக்கப்பட்டு ஓரிரவு அங்கு வசித்தார். பின்சுமந்திரனிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டுக் குகனுல் செலுத்தப்பட்ட ஓடமேறி, சீதை இலக்குமணர் இவ்விருவருடன் கங்கையைக் கடந்து பரத்துவாஜாச் சிரமம் சென்ருர். அங்கு பரத்வாஜரிடம் உபசரணை பெற்று அவரை வணங்கி அவர் ஆக்ஞைப்படி சித்திர கூட பருவதஞ்சென்று அங்கு சுகமாக வசித்துவந்தார்.

இராமரைவிட்டுப் பிரியமாட்டாமல் பிரிந்த சுமந்திரன் அயோத்தியை யடைந்து இராமருடைய வரலாறைத் தசாதரிடம் தெரிவித்தான். அவ்வார்த்தை செவியிற் பட்டதும் தசரதமகாராஜன் ஆ! ராமா! ஆ! ராமா !!! என்று கூறிச் சொல்ல முடியாத துக்கமுற்றுச் சரீரத்தை விட்டுச் சொர்க்கம் சென்ருர். பிறகு அமைச்சர்கள் வசிஷ்ட.முனிவருடைய ஆலோசனைப்படி அரசனது சரீரத்தைப் பத்திரப்படுத்தி வைத்துச் கேகயதேசம் சென்றபரதசத்துருக்னர்களுக்குத்தூதரைவிடுத்தழைத்து வந்தனர். பரதன் அயோத்திக்கு வந்து தன தந்தை யிறந்ததும் தன் அண்ணு காடேகியதும் தன் தாயாகிய கைகேயின் வார்த்தைபாலெனவறிந்து தாயைச் சினந்து வெறுத்துப் பின் சத்ருக்னனுடன் தன் தந்தைக்கு சமஸ்காரங்களை நடத்தி முடித்தான். பிறகு மந்திரிகளும குருமார்களும் பலபடியாகவும் இராஜ்யத்தை ஒப்புக்

கொள்ளும்படி கட்டாயப்படுத்தியும் பரதன் கேளாமல் இராமபிரானை யழைத்து வருவதாக பிரதிக்ஞை செய்து பட்டணத்து ஜனங்களுடன் வனத்துக்கே சென்றான். மரவுரியுடுத்து சித்ரகூட பருவதத்தில் வசித்து வரும் இராமபிரானைக் கண்ட பரதன் பணிந்து வருந்த முற்று வசிஷ்டர் முதலிய பிராமணோத்தமர்களுடன் இராஜ்யத்தைக் காக்கவேண்டுமென அவரை வேண்டிக் கொண்டான். இராமபிரான் பரதனுடைய வேண்டு கோளுக்கிசையாமல், “பரத! நான் என் அன்னையின் உத்தரவுப்படி பதினன்குவருடம் வனவாசம் செய்து பிறகுதான் இராஜ்யத்துக்கு வருவேன்” என்று கூறிப் பாதுகையை யளித்து பரதனை யனுப்பினர். பரதன் மனவருத்தத்துடன் பாதுகையைப் பெற்றுக் கொண்டு பிரயாணப்பட்டு அயோத்தியில் பிரவேசியாமல் நந்திக் கிராமத்திலிருந்து இராஜ்யத்தைக் காத்து வந்தான் பிறகு இராகவன் அவிடமிருந்து புறப்பட்டு அத்திரி மகாமுனிவரது ஆச்சிரமம் அடைந்து அவரை வணங்கி ஆசீர்வாதம்பெற்றனர். அத்திரிமகாரிஷியுடைய மனைவி யாகிய அனசூயை சீதா தேவிக்குத் தன்னுடைய ஆபரணங்களை யிட்டு அலங்கரித்தாள். இராமபிரான் அந்த முனிவரது ஆச்சிரமத்தில் ஓரிரவு வசித்து சீதை இலக்குமணன் இவர்களுடன் தண்டகாரண்ய மேகினர்.

இராமபிரான் இந்த வனத்தில் சஞ்சரிக்கும்போது தம்மை எதிர்த்த விராதனை வதஞ்செய்தார். பின்னர் இரா

மபிரான் சரபங்கரது ஆச்சிரமமடைந்தார். இராமரைத் தரிசித்ததும் சரபங்கர் முத்தியடைந்தார். அதுகண்டமுனிவர்கள் யாவரும் இராமபிரானைப் பிரார்த்திக்க அவர் இராக்கதர்களை வதஞ்செய்வதாக பிரதிக்ஞைசெய்தார். பின் இரகுபுங்கவன் அவ்வாச்சிரமத்தை விட்டு சுதீக்ஷ்ண முனிவரது ஆச்சிரமமடைந்து அவரை வணங்கி அவரால் உபசரிக்கப்பட்டு பின் அகத்திய முனிவரது ஆச்சிரமமடைந்து அவரைத் தரிசித்து வணங்கினர் அகத்தியர் ராமபிரானுக்கு விஷ்ணுவின் வில்லையும் இந்திரனளித்தஇரண்டு அம்புறைகளையும் பிர்மாஸ்திரத்தையும் கத்தியையும் கொடுத்தனர்.

இரகுகுலதிலகன் அவரிடம் விடை பெற்று அகத்திய முனிவரது ஆச்சிரமம் விட்டுப் புறப்பட்டுச் செல்லும்போது ஜடாயுவைக்கண்டு தமது தந்தையாகிய தசரதற்கு நண்பராகிய அவரையே சிதாதேவியைக் காப்பதற்குரியவரென நம்பினர்.

பின்னர் ஜானகீகாந்தன் பஞ்சவடிதீரம் சென்று அங்கே இலக்குமணனால் அமைக்கப்பட்ட பர்ணசாலையில் சிதாதேவியோடு சுகமாக வாசஞ்செய்தார். அங்கிருந்து வருகையில் ஒருநாள் சூர்ப்பனகை என்னும் ஓர் அரக்கி இராமபிரானுக்கெதிர்ப்பட்டு அவரைத் தான் கணவனாகவடைய விரும்பினள். இரகுபுங்கவன் அவளைக் கண்டித்துத் துரத்தினர். அவள் உடனே அவரை

விட்டு விலகி இலக்குமணனிடம் சென்று அவரை இச்சித்தாள். இலக்குமணனும் அவளை மறுத்துக் கோபித்தார். பிறகு அவ்வரக்கி மன்மததாபம் பொறுக்கமாட்டாமல் இராமரை யடைந்து அவர் எவ்விதம் கூறியும் கேளாமல் அவரை நிர்பந்தம் செய்தாள். இரகுகுலோத்தமன் மறுபடியும் அவளை மறுத்துக் கோபித்தார். அவள் உடனே சீதாதேவியிருந்த பர்ணசாலையிற் புகுந்துபிராட்டியை எதிர்த்தோடினள், அதைக்கண்டதும் இளய பெருமான் கோபங்கொண்டு அவ்வரக்கியின் நாசியையும் செவியையும் அறுத்துத் துரத்தினர். அவள் உடனே அழுதுகொண்டு ஜனஸ்தானம் சென்று கரன் என்னும் தன் அண்ணனிடம் இச்செய்தி தெரிவித்தாள், அதைக் கேட்டதும் அந்தக் கரன் வெகுண்டு தூஷணன், திரிசிரஸ் என்ற முக்கியமானவர்களுடன் வந்து இராமபிரானை யெதிர்த்தான்:

அதிபல பராக்கிரம சாலியாகிய இரகுநந்தனன் சீதயை இலக்குமணனிடம் ஒப்புவித்து விட்டு அவ்வரக்கர்களை யெதிர்த்து அமராடி ஒரு நொடியில் வதஞ் செய்தார். பின்னர் சூர்ப்பனகை இலங்கைக்கேகி இராவணனிடம் சகல சங்கதிகளையும் ஆதியோடந்தமாய் எடுத்தோதி முறையிட்டாள். அவளுடைய வார்த்தைகளைக் கேட்டதும் இராவணன் அப்பொழுதே தன் மனதில் சீதையை யபகரிக்க அவாக்கொண்டு மாரீசனிடம் சென்று அவனுடைய உதவியைக் கேட்டான். மாரீசன்

இராவணனுக் கிணங்கி உடனே ஓர் சொர்ண மான் வடிவமெடுத்துப் பஞ்சவடிவந்து சீதாதேவியின் முன் னிலையில் சஞ்சரித்தான். மானைக்கண்டதும் சீதை அதைப் பிடித்துத் தரும்படி தன் கணவனைக் கேட்டாள். இரகுகுலதிலகன் உடனே தேவியைக் காத்துக் கொண்டிருக்கத் தம்பி இலக்குமணனுக்குச் சொல்லிக் காட்டின் நடுவே ஓடிக்கொண்டிருக்கும் அந்தச்சொர்ணமானைத் துரத்திச் சென்று அது பிடிபடா தது கண்டு அதன்மேல் ஒருபாணம் எய்தனர். அந்த மான் உடனே தன்சுயவடிவமாகிய மாரீசனாகி "ஆ சீதா! ஆ! இலக்ஷ்மணா!" என்றலறிக்கொண்டே பிராணனை விட்டது.

இப்படியுண்டான தீனவார்த்தை சீதாதேவி செவி யிற்பட்டதும்இலக்குமணனை மிகவும் தொந்தரைசெய்து இராமரிடம் போகும்படி செய்தாள். இலக்குமணர் மறுக்கமுடியாமல் சீதையைக் காக்கத் தேவதைகளைப் பிரார்த்தித்துக்கொண்டே இராகவனிடம் சென்றார்.

இலக்குமணன் பர்ணசாலை விட்டகன்றதும் இரா வணன் ஓர் துறவி வேடம் பூண்டு அந்த ஆச்சிரமம் வந்து சீதையை யெடுத்துக்கொண்டு சந்தோஷத்துடன் ஆகாய மார்க்கமாகச் சென்றான். அவ்வரக்கன் பிராட்டியை யபகரித்துப் போவதைப் பார்த்த ஜடாயுவானது அவனை யெதிர்த்துத் தன் மூக்காலும் இறக்கையாலும் கால் களாலும் நகங்களாலும் அவனை இம்சித்தது. இராவணன்

சந்திரகாசம் என்ற ஓர் கத்தியால் ஜடாயுவை வெட்டிப் புவியில் வீழ்த்திவிட்டுத் தேவியை யெடுத்துக் கொண்டு தன் அரண்மனை போய்ச்சேர்ந்தான். அங்குச் சென்றதும் தேவியை அசோகவனத்தில் வைத்து அங்கிருந்து காவல்புரிய அநேக இராக்கத ஸ்திரீகளையும் ஏற்படுத்தினன்.

இது இப்படியிருக்க இனி இராமனைத்தேடிச்சென்ற இலக்குமணனைக் கவனிப்போம். இலக்குமணனை இராமர் கண்டதும் புறப்பட்டுவந்த தன் காரணங்கேட்டுத் தெரிவிக்கத் துக்கமுற்றுப் பர்ணசாலை வந்தார். ஆச்சிரமத்தில் வைதேகியில்லாமை கண்டு இராமபிரானும் இலக்குமணனும் மிகுந்த கவலையும் வருத்தமுமடைந்து பிராட்டியைத் தேடத்தொடங்கி வனத்தில் நெடுகச்சென்று திரிந்தார்கள். அப்பொழுது மார்க்கத்தில் இறக்கை முறிந்து விழுந்து கிடந்த ஜடாயுவைக்கண்டு அருகேசென்றதும் ஜடாயு இராமச்சந்திரமூர்த்தியிடம் நடந்த வரலாறுகளைச் சொல்லி உயிர் துறந்தது. பின் இரகுகுலதிலகன் ஜடாயுவைத் தகனம் செய்து அவருக்குத் தர்ப்பணமும் செய்தனர்.

பின் இருவரும் அங்கிருந்து சீதாதேவியைத் தேடிக் கொண்டே நடந்தார்கள். வழியில் அயோமுகியென்னும் ஓர் அரக்கி இலக்குமணனைக் கண்டு ஆசைகொண்டு தழுவிக்கொள்ள அவளை இலக்குமணன் மூக்கையும் கொங்கையையும் அறுத்துத் துரத்தினர். பிறகு கபந்

தன் என்பவன் இருவரையும் வழிமடக்கிக் கொண்டான். இருவரும் சென்று அவனுடைய இரண்டு கரங்களையும் துண்டித்தார்கள். கபந்தன் அவர்களை வேண்டிக்கொள்ள அவனுடைய சரீரத்தைக் கொளுத்தினர்கள். அந்தக் கபந்தன் தேவவடிவங்கொண்டு "இராமபிரபு! நீங்கள் சீதையையடைவதற்காக ருசியமூகபருவதத்தின் கண் ணிருக்கும் சுக்ரீவனிடம் போங்கள்" என்று கூறிச் சுவர்க்கம் சென்றுன். பிறகு இராமலக்ஷ்மணர்கள் இருவரும் சபரியின் ஆச்சிரமம் வந்து சேர்ந்தார்கள். அங்கு சுக்ரீவனுல் அனுப்பப்பட்ட அனுமார் இராமலக்ஷ் மணர்களைச் சந்தித்தார். அனுமான் அவர்களைத் தெரிந்துகொண்டதும் தங்கள் மன்னனுகிய சுக்ரீவ னிடம் அழைத்துச் சென்று விவரங்களை சுக்ரீவ னுக் கறிவித்து அக்கினிசாக்ஷியாக இருவருக்கும் சினே கம் செய்வித்தார். சுக்ரீவனுக்கு, இராமபிரான் அவன் தமையன் வாலியை வதம் செய்வதாக வாக்களித்தார். சுக்ரீவனும் சீதையை மீட்டுத்தருவதாகவாக்காளித்தான்.

பிறகு சுக்ரீவன் இராமபிரானிடம் தனக்கும் தன் தமையனுக்கும் விரோதமேற்பட்ட விவரத்தையும் அவ னுடைய பராக்கிரமத்தையும் கூறினுன். அக்கணத்தில் அவன் காட்டின துந்துபியின் எலும்புக்குவியலைத் தன் னுடைய காற் பெருவிரலால்வெகுதூரம் பரவும்படியாய்ச் செய்தார். மீண்டும் சுக்ரீவன் இராமபிரானது பராக்கிர மத்தைப் பரிசோதிக்கக் கருதி எழுமாமரங்களைக்

காட்டினன். அவைகளை இராமர் ஒரு பாணத்தால் சேதித்து அவனுடைய சந்தேகத்தை யொழித்தார். இதற்குப்பின் சுக்ரீவன் கிஷ்கிந்தை சென்று வாலியை யுத்தத்திற் கழைத்தான். வாலி வெகுண்டு தன் கிரகத்தி னின்று வெளிப்புறப்பட்டு சுக்ரீவனை எதிர்த்து அவனை மிகவும் துன்புறுத்தி இராமபிரானிடம் பயந்தோடும் படி யடித்தான். பிறகு இராமர் சுக்ரீவனுக்கு ஓர் அடையாள மேற்படுத்தி யுத்தத்திற் கனுப்பினர். சுக்ரீவன் வாலியிடம் மீண்டும் சென்று சண்டைக்கு அழைத்தான். வாலிசுக்ரீவனையெதிர்க்க யத்தனிக்கையில் அவன் மனைவி தாரை அவனைத் தடுத்தாள். அவன் அவள் மொழி கேளாது சண்டைசெய்ய ஆரம்பித்து தன் தம்பியுடன் கடும்போர் செய்தான். அச்சமயம் இராமபிரான் மறைவி லிருந்து ஓர் பாணம்விட்டு அவனைப் புவியில் வீழ்த்தினர். அந்த வாலிதன்னை அடித்தது இராமபிரானெனஅறிந்து தேகத்தை விட்டுக் சுவர்க்கம் சென்றான்.

தம்மை ஆசரித்தவர்களிடம் அன்புள்ள இரகு சிரேஷ்டன் சுக்ரீவனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்தார். பிறகு இரகு நாயகன் சீதாபிராட்டியைப் பிரிந்ததுக்கத் துடன் மால்லியவான் என்னும் மலையடிவாரத்தில் இலக்கு மணனுடன் நான்குமாதகாலம் வரையில் வாசஞ் செய் தார். இதன் பின் இலக்குமணன் இராமர துஉத்தரவுப்படி சுக்ரீவனை வானர சைன்னியங்களோடு மாலியவான் என்றமலைக்கு அழைத்து வந்தார் சுக்ரீவன் தன் சைன்

னியங்களைப்பார்த்துநான்குதிக்குகளிலும்சென்றுஇராமரது கட்டளைப்படி பிராட்டியாரை தேடிவரும்படி ஆக்ஞாபித்தான். தங்களது அரசன்கட்டளையைச் சிரமேற்கொண்டு செல்லும்வானரங்களுள்சிறந்தவரான அனுமாரிடம்இராமபிரான் தமது கைக்கணையாழியையளித்தார். அதை அனுமார் வைதேகிக்கு நம்பிக்கையுண்டாவதன் பொருட்டுக்காட்டலாமென வணக்கத்துடன் பெற்றுக்கொண்டு வெளிப்புறப்பட்டார். பின்னர் வானரவீரர்கள்யாவரும் தெற்குத்திசையை நோக்கிச் சென்று சீதாபிராட்டியைத் தேடிக்கொண்டே விந்தியபர்வதம்வந்தார்கள். இப்பொழுதுதங்கள்இறைவனுகிய சுக்ரீவன் கூறியபடி ஒருமாதத்தவணை தாண்டியபடியால்அந்தமலையிலேயேவானரர்கள் பிராயோபவேசஞ் செய்தார்கள். அந்த மலையில் சீதாதேவியைப்பற்றிச் சம்பாதி கூறக்கேட்டுத் தெரிந்துகொண்டார்கள். பின்னர் அங்கதன் முதலிய வானரவீரர்கள் கடலை நோக்கிச் சென்றூர்கள். அவர்களில் கடலைத் தாண்ட வல்லமையுள்ளவர்கள் எவருமில்லாமல் மலைத்தார்கள். அப்போது வாயுநந்தனுகிய அனுமான் தம்முடைய மகிமையை ஜாம்பவான் கொண்டாடஅதைக் கேட்டுஉற்சாகமடைந்து மகேந்திரபருவதத்தின்மீதேறித் தேவர்கள் யாவரையும் வணங்கி நின்று அங்கிருந்து கடலைத்தாண்டத் தாவினுர். அச்சமயம் வழியில் எதிர்ப்பட்ட மைனுக பருவதத்தைஅடக்கி சுரசையைவணங்கி ஸிம்மிகையைக் கொன்று அக்கரை சேர்ந்தார்.

பின்னர் இலங்கையை யடைந்து இலங்கைக்கு அதி தேவதையாகிய இலங்கிணியை வென்று இலங்கா புரிக்குள் சென்று சீதாதேவியைத் தேடிச்செல்லுகையில் நித்திரைபுரியும் இராவணனைக் கண்டார். பின் தேவி எங்கிருக்கிறாளென்று பார்த்துக்கொண்டேசென்று அசோக வனத்தை அடைந்து பார்க்கையில் அங்கு தேவி மிகவும் வருத்தத்துடனிருக்கக் கண்டு தாமும் விசனமுற்று அங்கிருந்த ஓர் மாத்திலேறி அதில் மறைந்துகொண்டு இம் மங்கைதானோ சீதை யென்பதுபற்றி ஆலோசனை செய்து கொண்டிருந்தார்.

அச்சமயம் காமவிகாரங்கொண்டதசக்ரீவன்மைதலியினிடம் வந்து தன்னைக்கூடிச் சுகமளிக்கும்படி பிரார்த்தித்தான். அவ்வார்த்தை கேட்ட சீதை "ஏ இராவணா! நான் உன்னை எவ்விதத்திலுஞ் சேரேன். நீ என்னைவிரும்புவது வீண்; செய் போவென்று மறுத்தாள். அதனால் இராவணன்மிகவும் கோபமடைந்துதன் அரண்மனைசென்றான்.

இராவணன் கோபித்துச் சென்றதும் சீதைவருத்தமுற்றுத் தன் நாயகனைநினைத்துவருந்தினாள். அச்சமயம் நோக்கி அனுமான் தேவி முன் தோன்றி தன் வரலாறு கூறிக் கணையாழியைக் கொடுத்தார்.

வைதேகி அந்தக் கணையாழியைக்கண்டதும் சொல்ல முடியாததுக்கமுற்றுப்பின் அந்தமாருதியின்கரத்தில் தன் சூடாமணியைக் கொடுத்தாள். சூடாமணியை யடைந்த ஆஞ்சனேயர் பிராட்டியை நோக்கி, "அம்மா! பயப்பட

வேண்டாம். இராமச்சந்திரபிரபு இராவணனையுத்தத்தில் வதஞ்செய்து தங்களைச் சீக்கிரத்தில் மீட்டுக்கொண்டு போவார்; வருந்த வேண்டாம்." என்று சமாதானம் கூறி அங்கிருந்து புறப்பட்டார். அப்பொழுது தமக்குள் ஓர் ஆலோசனை செய்துகொண்டு அந்த அசோக வனத்திலுள்ள மரங்களை முறித்தார். அதுகண்டு சண்டைக்கு வந்த இராக்கதர்களையும் வதஞ்செய்தார். பிறகு இந்திரஜித்தனுடன் அமர்புரிந்து அவன்விடுத்த பிர்மாஸ்திரத்தால்கட்டுண்டுஇராவணனிடம் சென்று அவனுக்கு சீதாகாந்தனுடையபராக்கிரமமனைத்தையுந்தெரிவித்தார்.

அதைக்கேட்ட இராவணன் வெகுண்டு அனுமான் வாலில் துணியைச்சுற்றி அதில் தீயை வைத்து கொளுத்தும்படி செய்ய, அனுமார் அந்த வாலின் தீயால் இலங்கை முழுவதையு மெரித்துவிட்டுக் கடலைக் கடந்து இக்கரை சேர்ந்துவானரர்களுடன் கலந்து கொண்டார். பிறகு அனுமார் வானரக்கூட்டங்களுடன் இராமச்சந்திரமூர்த்தியிடம் சென்று அவரை அன்போடு வணங்கிப் பிராட்டியைக் கண்டு கணையாழி தந்ததைக் கூறித் தாம் தேவியிட மிருந்து பெற்று வந்த சூடாமணியைக் கொடுத்தார்.

உடனே இராமபிரான் சுக்ரீவன் முதலிய கணக்கற்ற வானரவீரர்களுடன் பிரயாணப்பட்டு சமுத்திரக் கரைவந்து சேர்ந்தார்.

அப்பொழுது தன் அண்ணனாகிய இராவணனால் திரஸ்கரிக்கப்பட்ட விபீஷணன் வந்து இராமச்சந்திரமூர்த்தியைச் சரணமடைந்தான். பகைவர்களையொழிக்க வல்லவரான இராமபிரான் அந்த விபீஷணனை இலங்கைக்கு அரசனாகச் செய்யக் கருதி அங்கே பட்டாபிஷேகமும் செய்வித்தார்.

பின்னர் இராகவன் சமுத்திரராஜன் வழிகாட்ட நளனைக்கொண்டு கடலில் அணைகோலி அந்தச் சேதுவின் மூலமாக சுவேலபருவதம் சென்றார். அங்கு இராமச்சந்திரனுடைய கட்டளைப்படி நீலன் முதலியவானரவீரர்கள் கையில் கற்களையும் மரங்களையும் எடுத்துக்கொண்டு இலங்கையை முற்றுகைபோட்டார்கள். அதை யறிந்த இராவணன் சினமடைந்து பிரகஸ்தன் முதலியவர்களையனுப்ப அவ்வரக்கர்களை வானரவீரர்கள் எதிர்த்துக் கொன்றுச் சிங்கநாதம் செய்தார்கள். பிறகு சுக்ரீவன் அனுமான் இராமலக்ஷ்மணர்கள் இவர்களும் யுத்தத்திற் கலந்துகொண்டு கடும்போர்செய்து ஆயிரக்கணக்கான அரக்கர்களைக் கொன்றார்கள். அது கண்டு சினங்கொண்ட இராவணன்மகன் மேகநாதன் இராம லக்ஷ்மணர்களையெதிர்த்து அவர்களை நாகபாசத்தால் கட்டினான். அந்த நாகபாசத்தைக் கருடன் அறுத்து இராமலக்ஷ்மணர்களை விடுவித்தான். பிறகு இராவணனே நேரில் வந்து இராமனை யெதிர்த்து போர்முனையில் அவமானமடைந்து தன் சகோதரன் கும்பகர்ணனை யெழுப்பி இராமனைக் கொல்வதற்கு அனுப்பினான்.

கும்பகர்ணன் எழுந்து போர்க்களம்வந்து பொருது வானரசைன்னியங்களைச்சின்னுபின்னப்படுத்தினன். அது கண்ட இராமச்சந்திரபிரபு அவன்மேல் ஐந்திராஸ்திரம் விடுத்து அவனைக் கொன்றார். பின் இராவணனை அனுப்பிய தேவாந்தகனை அனுமானும் நராந்தகனை அங்கதனும் யுத்தகளத்தில்வதஞ்செய்தார்கள். பிறகுஇரதத்தின்மீதேறி எதிர்த்தஅதிகாயன்மகாகாயன்என்ற அரக்கர்களை இலக்ஷ்மணர்எதிர்த்து வதஞ்செய்தார். பிறகுஇராவணன் அனுப்பிய இந்திரஜித்து, இராமலக்ஷ்மணர்களை யெதிர்த்து அவர்களை பிர்மாஸ்திரத்தால்கட்டி வானரர்களை பாணங்களாலும் அடித்தான். அனுமார் ஜாம்பவானுடைய ஆலோசனைப்படி ஒஷதிமலை சென்று அங்கு ஒஷதியகப்படாமையால் வெகுண்டு அம்மலையையே அடியோடு பெயர்த்து வந்து அந்த ஒஷதிகளின் வாசனையால், இராமலக்ஷ்மணர்கள் யாவரையும் பிழைக்கச் செய்தார். இதன் பிறகு வானரவீரர்கள் இலங்கையைக் கொளுத்தி அதமாக்கினர்கள். அதுகண்ட இராவணன் பொறுக்கொணுச் சினமடைந்து கும்பகர்ணனுடைய இரண்டு குமாரர்களை யனுப்பினன். அவர்களில் கும்பன் என்பவனை இராமச்சந்திரமூர்த்தியும் சூரியன் குமாரனுகிய சுக்ரீவன் நிகும்பனையும் கொன்றார்கள். பின்னர் இராவணன் கரன் மக்களாகிய மகாரக்ஷனை அனுப்பினன். இவனை இராமபிரான் ஒரேபாணத்தால் எமபுரியனுப்பினர்.

இவ்வளவனந்தம் பேர் வதமானதைக் கண்ட இராவணன் மிக்க வருத்தமும் சினமுமடைந்து தன் பிள்ளை மேகநாதனை யனுப்பினான். யுத்தத்தில் எல்லோரையும் மோகப்படுத்தக்கருதி மாயையால் சீதையைக் கற்பித்து தன் இரதத்தில் வைத்துக்கொண்டு யுத்தத்திற்குப் புறப்பட்டு வந்து, அனுமான் முதலியவர்கள் பார்த்திருக்கும்போது தன்கைக்கத்தியால் மாயாசீதையைவெட்டினான். அதுகண்ட அனுமான் அமர்புரிவதை விடுத்து துக்கமுற்று இராமபிரானிடம் வந்து நடந்ததைத் தெரிவிக்க அதுகேட்டதும் இராமர் மூர்ச்சையடைந்தார். இராமர் மூர்ச்சையடைந்ததைக்கண்ட விபீஷணன் இராகவனை நோக்கி. உலக நாயகனாகிய பிரபுவே! துக்கத்தை விட்டு விடுங்கள். நான் இராவணன் குமாரனாகிய இந்திரஜித்தினுடைய மனத்தை யறிவேன். அவன் நிகும்பிலையில் ஹோமம் செய்வதன் பொருட்டுச் செய்த மாயையிது. இராமச்சந்திரபிரபுவே! எனதமைச்சர்களுடன் என்னையும் இலக்குமணனையும் இப்போதே அனுப்புங்கள், அந்த நிகும்பிலையில் ஹோமம் செய்து முடிப்பானாகில் அவனை ஜயிக்கமுடியாது. இது நிச்சயம்என்றான். இராமபிரான் உடனே தன் தம்பி இலக்குமணனை நோக்கி "மேகநாதனை வதஞ் செய்துவா; விபீஷணனுடன் விரைவாகச்செல்" என்று கூறினார். அக்கணமே இலக்குமணனும் விபீஷணனுடன் புறப்பட்டு நிகும்பிலைக்கு வந்தான். இங்கிருந்த இந்திரஜித்தை இலக்குமணனுக்கு விபீஷணன் காட்டினான். இலக்குமணன் சினமடைந்து

அநேகபாணங்களை விடுத்து அங்கு சூழ்ந்திருந்த இராக்கதர்களைக் கலைத்தார். பின் இந்திரஜித்துக்கும் இலக்குமணனுக்கும் யுத்தம்நேர்ந்து. வெகு நேரம் இருவரும் யுத்தம் செய்தார்கள். கடைசியில் இலக்குமணன் இந்திரஜித்துனுடைய தலையைச் சேதித்து அவனைத்தன்பாணத்திற் கிரையாக்கினான்.

இராவணன் தன் குமாரன் இறந்ததைக் கேட்டுச் சகிக்கொணாத துக்கமுற்றுக் களைத்துத் தைரியமிழந்து பொறி கலங்கி அங்கங்கள் சோர்வடைந்து கதறினான். "என்ஜன்மமும்வீணாயிற்று.என்வீரவாதமும்வீணாயிற்று. ஏனெனில் இந்திரஜித்து இறந்ததையும் என்கண்கொண்டு பார்த்துக்கொண்டிருக்கிறேனல்லவா? ஏசூரனேஇராஜ்யமிழந்தவனும் தீனனுமாகிய மானிடனால்அடிபட்டிறந்து உன்னையே நினைத்துக்கொண்டிருக்கும் என்னைவிட்டு எங்குச்சென்றாய்? இந்திரனையும் வென்று அவனை கட்டிக் கொண்டு வந்து சிறைச்சாலையில் அடைத்த பராக்கிரமசாலியன்றோ? பிரமதேவன் உனக்குநல்லவார்த்தை சொன்ன பிறகல்லவா இந்திரனை விடுவித்தாய். அத்தனை மகிமை வாய்ந்த நீ ஒருவராலும் ஜயிக்கமுடியாதவனல்லவா? இச்சமயம் என்னைவிட்டு நீ எங்குச் சென்றாய்? நான் என்ன செய்வேன்? எங்குச் செல்வேன். நீபோன இடத்திற்கு என்னையும் அழைத்துக்கொள்! தாமதம் செய்யாதே.உலகததில்உனக்குச்சமமானவருமுண்டோ? உனக்கு நான் தந்தையானதிற் கர்வங்கொண்டிருந்தேனே. தூம்ராக்ஷன், வஜ்ரதம்ஷ்டன், பிரதாபமுள்ள

கும்பகர்ணன், பிரகஸ்தன் முதலிய இராக்கதர்கள் மாண்டார்கள். அவர்கள் இறந்ததை நான் சிறிதும் பொருட்படுத்தவில்லை. உன் பலத்தை நம்பிக் கவலையற்றிருந்தேனே" என்று இவ்வாறு வெகுநேரம் புலம்பிக்கொண்டிருந்து பிறகு மனந்தேறிச் சினமடைந்து சாரதியையழைத்துத் தேரைக் கொண்டுவர உத்தரவிட்டு, சாரதி இரதம் கொண்டு வந்ததும் அதிலேறிக்கொண்டு யுத்தகளம் வந்து இராமரை யெதிர்த்துக் கடும்போர் புரிந்தான். இராமரும் உதயகிரியில் சூரியன் புறப்பட்டு எழுந்தற்கொப்ப இந்திரன் கொண்டுவந்தமாதலி என்னும் இரதத்திலேறிக்கொண்டு மகாகோபத்துடன் அமர்புரிந்தார். பின் அகத்திய முனிவர் கூறியபடி உலகசத்துருவாகிய இராவணனை யுத்தத்தில் பிர்மாஸ்திரம் விடுத்துச் சங்கரித்தார். தன் கணவன் மறித்ததை யறிந்த மந்தோதரி சொல்லொணாத் துயரகடலில்மூழ்கிக்கதறினாள். இதன் பின் இராமபிரான் ஆக்ஞைப்படி விபீஷணன் இராவணனைத் தகனம் செய்தான்.

இவ்விதம் துஷ்டர்களைச் சங்கரித்த பின் இரகுபுங்கவன் அக்கினிபகவானுடைய வாய்மொழி கேட்டுச் சீதை குற்றமற்றவளென வறிந்து தேவர்களுமுத்தரவு கொடுக்க, தசரதமகாராஜனுடைய சந்நிதியில் அவ்வம்மையை ஏற்றுக்கொண்டார். அப்போது தேவர்கள்யாவரும் "இராமச்சந்திர பிரபுவே! உலகமுழுதும்பயமடையத் தக்க செய்கையைச் செய்தது தங்களுக்கே ஏற்கும்!

இவ்வாறு சிதை செய்ததும் அவளுக்குத்தான் தகும்! இராம! தாங்கள் இலக்ஷுமிதேவியுடன் பிரத்தியக்ஷமாக வந்த நாராயணமூர்த்தியல்லவா!" என்று கூறிச் சந்தோஷமடைந்து கொண்டாடினார்கள். பிறகு இலக்ஷுமணரும் சந்தோஷமடைந்தார்.

பிறகு தருமசொரூபனும் சத்தியசந்தனும் கம்பீரமான புத்தியையுடையவரும் சௌந்தரியம் பொருந்தியவருமாகிய இராமபிரான் தமது தம்பி இலக்குமணனைக் கொண்டு விபீஷணனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்தார். லோகநாதனாகிய இராகவன் நண்பர்களுடனும் மனைவியுடனும் தம்பி இலக்குமணனுடனும் புஷ்பக விமானமேறிக்கொண்டு கிஷ்கிந்தை வந்து சேர்ந்தார்.

கிஷ்கிந்தையிலிருந்து வானரஸ்திரீகள் யாவரும் சீதையைப் பார்க்கவேண்டுமென்கிற பிரியத்தால் புஷ்பகத்தின் மீதேறினார்கள். பின் இராமபிரான் அங்கிருந்து புறப்பட்டு பாரத்வாஜாச்சிரமம் வந்தார். அங்கு பாரத்வாஜ முனிவர் இராமரை அன்றிரவு தங்கும்படி நிறுத்தி விட்டார். அதனால் இராமர் தன் வருகையை பரதனுக்குத் தெரிவிக்க அனுமானை யனுப்பினார். பரத்வாஜாச்சிரமத்து முனிவர்கள் யாவரும் இராமச்சந்திரமூர்த்திக்கும் இலக்குமணனுக்கும் மிக்க உபசாரம் செய்து மகிழ்வித்தார்கள். பிறகு இராமச்சந்திரமூர்த்தி அவிட மிருந்து புறப்பட்டு

பரதனிடம் வந்து தாய்மாரும் மற்றவரும் கொண்டாட அயோத்தியில் பிரவேசித்தார். அயோத்தியாபுரி வாசிகள் யாவரும் இராமபிரானிடம் வந்து, “இராமா! நாங்கள் கிருதார்த்தர்களானோம்” என்று கூறினார்கள். மேகக் கூட்டங்களைக் கண்ட சாதகபக்ஷிபோலவும் மயில்கள் போலவும் தாயைக்கண்ட குழந்தைகள்போலவும் சந்தோஷமடைந்தார்கள். பிறகு வசிஷ்டர் முதலிய முனிவர்கள் சந்தோஷத்துடன் மந்திரிகளோடு கூடியிருந்து அஷ்டவசுக்களும் இந்திரனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்தது போல் ஸ்ரீ ராமபிரானுக்கு பட்டாபிஷேக மஹோற்சவம் செய்தார்கள்.

அந்தப்பட்டாபிஷேக மகோற்சவத்திற்கு சுக்ரீவன் முதலிய வானரசிரேஷ்டர்கள் யாவருக்கும் அவரவர் யோக்கியதைக்குத் தக்கபடி சம்மானமளிக்கப்பட்டன. சீதாதேவி அனுமான்மேல் விசேஷ அபிமானம்வைத்து அவருக்குத் தன் முத்தாரம் போட்டு மகிழ்ந்தாள். அச்சம்மானம்பெற்ற ஆஞ்சநேயர் தாம் முன்னம் அசோக வனத்தில் சீதையைக்கண்டபோது அடைந்த சந்தோஷமடைந்தனர். புத்திரனிடம் வாத்சல்லியமுள்ள கௌசல்லியை, வானரஸ்திரீகள் யாவருக்கும் வஸ்திரம், குங்குமம் சந்தனம் இவைகளாலும் ஆபரணங்களாலும் அலங்காரஞ் செய்தாள்.

பிறகு சுக்ரீவன் முதலிய வானரர்கள் யாவரும் ஸ்ரீராமனுத்தரவுப்படி கிஷ்கிந்தை சென்றார்கள். மிகுந்த

பலமுள்ளவனும் சிரஞ்சீவியும் யுத்தத்தில் உதவி செய்தவனுமாகிய விபீஷணன் இராமனிடம் விடை பெற்றுக்கொண்டு இலங்கைசென்ருன். பின் இராமபிரான் சிங்காதனமேறிவைகுண்டத்தில் விளங்கும்விஷ்ணுபோல் விளங்கினர். பிறகு இராமபிரான் இலக்குமணனுடைய சம்மதியின்பேரில் பரதனுக்கு யுவராஜ்ய பட்டாபிஷேகம் செய்வித்தார். மகாத்மாக்களாகிய இராமலக்ஷ்மண பரதசத்ருக்னர்கள்நால்வரும் தத்தம்மனைவிமாருடன் ஆகாயத்தில் நக்ஷத்திரங்களுடன் விளங்கும் சந்திரன்போல் அயோத்தியில் விளங்கினார்கள்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

இராமோதந்தம்.

முற்றிற்று.

புத்தக விளம்பரம்.

புத்திமானே பலவான்	... ...	0	6	0
மங்களாம்பாள்	... ...	0	8	0
லதாங்கி லலிதாங்கி ...	... நாடகம்	0	12	0
பாமாவிஜயம்	... ...	0	12	0
வனஜாட்சி	... ...	0	8	0
மாளவிகாக்னி மித்திரம்	... ...	0	8	0
தெய்வமகிமை	... ...	0	1	0
சூதசங்கிதாஸாராம்ருத வசனம்	...	1	0	0
போஜசரித்திரம் படத்துடன்		2	0	0
யோகினி ஜாலக் கதை.		0	4	0

விலாசம்

A. S. பாரதி

மானேஜர், ஸ்ரீபாலசுப்பிரமணியன் கம்பெனி,

நெ. 32, ஹைரோட், திருவல்லிக்கேணி

சென்னை.